**<u>கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்</u>**
**<u>முன்னிலை: திரு. பிரசாந்த்.மு.வடநேரே, இ.ஆ.ப.,</u>**

அ 4/04/2019

நாள்: 06.03.2019.

பொருள் : **உள்ளூர் விடுமுறை** - மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் மாசிக்கொடைவிழா 03.03.2019 முதல் 12.03.2019 வரை நடைபெறுதல் - 12.03.2019 (செவ்வாய்) அன்று உள்ளூர் விடுமுறை வழங்கி - ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை :
1. அரசு நிலை ஆணை எண் 600 பொது (பல்வகைத்) துறை நாள் : 06.07.2012.
2. இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் தலைமை அலுவலகம், சுசீந்திரம் கடித எண் ந.க.109/2016/டி1 நாள்: .02.2019.

+++O+++

**<u>ஆணை:</u>**

பார்வையில் 1-ல் காணும் அரசாணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் மாசிக்கொடை விழாவினை முன்னிட்டு 12.03.2019 (செவ்வாய்) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(2)** 12.03.2019 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2019 ஏப்ரல் திங்கள் இரண்டாவது சனிக்கிழமை (13.04.2019) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** 12.03.2019 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்)/- எம்.சுகன்யா
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல் உத்தரவுப்படி/

6.3.2019

உசூர் மேலாளர் (பொது)

பெறுநர்
அனைத்து மாவட்ட அலுவலர்கள்

6/3/19

நகல் : தலைமைச் செயலாளர், பொது (பல்வகைத்) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல் : முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
நகல் : கூடுதல் செயலர், பொதுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல் :

1) மாநிலக் கணக்காயர், சென்னை-18.
2) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக எழுத்தர்
3) மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர்
4) மாவட்ட ஆட்சியரின் அரசிதழ் பதிவு பெற்ற நேர்முக உதவியாளர்கள்
5) மாவட்ட சார்நிலை அலுவலர்கள்
6) மாவட்ட கருவூல அலுவலர்
7) மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், நாகர்கோவில்
8) அனைத்து நகராட்சி மற்றும் ஊராட்சி ஆணையர்கள்
9) இயக்குநர், நாகர்கோவில் வானொலி
10) நகராட்சி ஆணையர், குழித்துறை.
11) செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் (20 நகல்கள்) - பிரசுரம் செய்திடவும்
12) அ2 / அ4 பிரிவு